


**06.09.2024**

தலைப்புச் செய்திகள்

1. நீர் மேலாண்மைக்கான மக்கள் இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி குஜராத் மாநிலம் சூரத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

2. நாட்டில் துறைமுகங்களை விரிவுப்படுத்தி வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் 850 கோடி ரூபாய் முதலீட்டில் 3 அமெரிக்க நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கையெழுத்திட்டுள்ளார்.

4. மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்படுவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி கூறியுள்ளார்.

5. பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் மகளிர் 67 கிலோ பளு தூக்கும் போட்டியின் இறுதிசுற்றில் கஸ்தூரி ராஜாமணி இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நீர்வள மேலாண்மை மற்றும் நீடித்த நீர்ப்பாதுகாப்பிற்கான ஜல்சஞ்சய், ஜல்பாகிரதி திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி, குஜராத் மாநிலம் சூரத்தில் காணொலி மூலம் இன்று தொடங்கிவைத்தார்.

பிரதமரின் நீர்வளத்திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் எதிர்கால பாசனத் தேவைகளுக்கு தண்ணீரை பயன்படுத்தும் வகையில் மக்கள் இயக்கமாக இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்புகள், பெருநிறுவனங்களின் சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 24 ஆயிரத்திற்கும் அதிகமான மழைநீர் சேமிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு நீர்மேலாண்மை உறுதி செய்யப்படும்.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கைக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடியின், புரூனே, சிங்கப்பூர் பயணம் மேலும் வலு சேர்த்துள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்நாடுகளுடனான பரஸ்பர நல்லுறவை மேம்படுத்துவதுடன், குறிப்பாக மின் குறைகடத்தி உற்பத்தி பிரிவில் நவீன தொழில்நுட்பம் மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

பியூஷ் கோயல்

லெபனான், துனீஷியா உள்ளிட்ட மத்திய தரைக்கடல் நாடுகளுடன் வர்த்தகத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய - மத்திய தரைக்கடல் நாடுகள் வர்த்தக மாநாடு 2024-ஐ புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், உலகளாவிய வர்த்தகத்தில் இந்நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

இந்நாடுகளின் உற்பத்தி பொருட்கள் மற்றும் சுற்றுலாவிற்கு இந்தியாவில் மிகச்சிறந்த வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டிலுள்ள துறைமுகங்களை விரிவுப்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய திரு. பியூஷ்கோயல், இளையோருக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கி தருவதில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் நாட்டின் உற்பத்தி துறை மிகச்சிறந்த வளர்ச்சியடைந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

அஷ்வினி வைஷ்ணவ்

இந்தியா - ஜப்பான் இடையே ரயில்வே துறையில் ஒத்துழைப்பை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பது தொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆலோசனை மேற்கொண்டார்.

ஜப்பானில் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள அவர், டோக்கியோவில் அந்நாட்டு தொழில் நுட்பத்துறை அமைச்சருடன் இருநாடுகளுக்கிடையே நிலம், கட்டுமானம், போக்குவரத்து மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

மத்திய கல்வி அமைச்சகம்

நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் தேசிய கல்வி உதவித்தொகை பெற வரும் 30-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது

மாணாக்கரின் பள்ளி இடைநிற்றலை தவிர்த்தல் மற்றும் உயர்கல்வியை உறுதிசெய்யும் வகையில் தகுதியுடைய மாணாக்கருக்கு மத்திய அரசு கல்வி உதவித்தொகை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கை எட்டுவதற்கான பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமது அமெரிக்க பயணத்தின் ஒருபகுதியாக சிக்காகோவில் 3 நிறுவனங்களுடன், 850 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்திடப்பட்டதாகவும் அவர் கூறினார்

அமெரிக்க நிறுவனங்களின் முதலீடுகள் மூலம் தமிழகத்தில் உலகத்தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் பூங்காக்கள், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டங்கள், திறன்மேம்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான இளையோருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே சமூகவலைதளத்தில் முதலமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில், மாணவர்கள் எதிர்கால சவால்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டு அறிவாற்றலை கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

அறிவியல் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை துறைசார் வல்லுநர்கள் மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் கடிதம்

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மீனவர்களின் அபராத தொகையை தள்ளுபடி செய்து அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்றார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி கைதுசெய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

பொன்முடி

தமிழகத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்படுவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் பில்லூர் கிராமத்தில் இம்முகாமில் இன்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அமைச்சர், குடும்பஅட்டை, பட்டாமாறுதல், வங்கி கணக்கு தொடர்பான பல்வேறு மனுக்களுக்கு தீர்வுகாண பட்டுள்ளதாக கூறினார்.

மாவட்டத்தில் இதுவரை 85 இடங்களில் மக்களுடன் திட்ட முகாம்கள் நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

விநாயகர் சதுர்த்தி

விநாயகர் சதுர்த்தி நாளை கொண்டாடப்படும் நிலையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் விநாயகர் சிலை தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

சுற்றுசுழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் களிமண் மற்றும் காகித கூழால் தயாரிக்கப்படும் விநாயகர் சிலைகள் தமிழகம் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

பிரசித்தி பெற்ற பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலில் விநாயகர் சதுர்த்தி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெறுகிறது

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர்ச்சந்தையில் பூக்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

பிச்சிப்பூ கிலோ ஆயிரம் ரூபாய்க்கும்,

மல்லிகைப்பூ கிலோ 500 ரூபாய்க்கும் விற்பனையாகிறது

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

அகழாய்வு

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் 3-ம் கட்ட அகழாய்வில் முழுமையான செங்கல்சுவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாயஸ் ..

❖❖❖❖❖❖❖

ஊட்டச்சத்து வாரம்

தேசிய ஊட்டச்சத்து மாத கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக ஈரோடு திண்டலில் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற சிறுதானிய விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய ஊட்டச்சத்து வாரம் குறித்து தாடிக்கொம்பு ஆரம்ப சுகாதார நிலைய சித்தமருத்துவர் யவனராணி தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கோவில்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெறும் ஆவணி மூலத்திருவிழாவில் இன்று நாரைக்கு முக்தி அளித்த லீலை இன்றுமாலை நடைபெறுகிறது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

திருப்பத்தூர் மாவட்டத்தில் தொலைதூர கிராமங்களில் கால்நடை மருத்துவ ஊர்திகள் தினந்தோறும் காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை குறிப்பிட்ட வழித்தடங்களில் இயக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

கால்நடை வளர்ப்போர் இவ்வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காலநிலை மாற்ற இயக்கக்குழு தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு வரும் 18-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. அருணா கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

மேட்டூர்

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் கனமழை தொடர்வதால் கபினி, கிருஷ்ணராஜசாகர், அணைகளிலிருந்து 21 ஆயிரம் கனஅடி தண்ணீர் காவிரிவில் திறந்துவிடப்படுகிறது.

இதையடுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்றுகாலை முதல் வினாடிக்கு 19 ஆயிரத்து 600 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக 19 ஆயிரம் கனஅடியும், கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**thdpiy**

**tq;ff;flypy; cUthd fhw;wOj;j jho;T gFjp tlf;F tq;f fly; gFjpapy; epyTtjhf nrd;id thdp;iy Ma;T ikak; njhptpj;Js;sJ.**

**,J tUk; 9-k; Njjp fhw;wOj;j jho;T kz;lykhf tYg;ngwf;$Lk; vd;Wk; ,k;ikak; $wpAs;sJ.**

❖❖❖❖❖❖❖

பாராலிம்பிக்

பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் ஈட்டி எறிதல் இறுதியாட்டத்தில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் தீபேஷ் குமாரும்

மகளிர் பிரிவில் பாவனாபெண் சவுத்ரி இன்று களமிறங்குகின்றனர்.

ஆடவர் குண்டு எறிதலில் சோமன் ராணா பங்கேற்கிறார்.

ஆடவர் உயரம் தாண்டுதலில் பிரவீன்குமாரும்,

மகளிர் 67 கிலோ பளு தூக்கும் இறுதிப் போட்டியில் கஸ்தூரி ராஜாமணியும் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖